# மெட்ரோ நிலையத்துடன் சுரங்கப்பாதை இணைப்பு

சென்னை, ஜன. 3–

அரசினர் தோட்ட மெட்ரோ ரயில் நிலையத்துடன், அண்ணா சாலை, வாலாஜா சாலை சுரங்கப்பாதை இணைக்கப்பட உள்ளது.

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, இம்மாத இறுதியில் மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்கப்பட உள்ளது. இப்பாதையில், நிலைய கட்டுமான பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன.

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே உள்ள, அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து, பயணியர் வெளியேறும், நான்கு வழிகளின் கட்டுமான பணிகள், துரிதமாக நடந்து வருகின்றன.

இத்துடன், அண்ணா சாலையில், வாலாஜா சாலை இணையும் இடத்தில் உள்ள சுரங்கப்பாதையை, மெட்ரோ ரயில் நிலையத்தின் தென் பகுதியுடன் இணைக்கவும் ஏற்பாடு நடக்கிறது.

இப்பணி முடிந்ததும், வாலாஜா சாலை மற்றும் அண்ணாசாலையின் மேற்கு பகுதியில் இருந்து, மெட்ரோ ரயில் நிலையத்துக்கு செல்வோர், இச்சுரங்கப்பாதை வழியாக எளிதாக சென்றடையலாம்.